முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்

ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1431

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.08.2023**, புதன்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானிகளை வணங்க வகை செய்து
ஞானம் தருகின்ற ஆறுமுக அரங்கனே
நாட்டிடுவேன் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானும் ஞான அறிவுரை ஆசி
உயர்வாக சோபகிருது வேங்கை திங்களில் உரைப்பேன்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 13 ம் நாள், 30.08.2023 புதன்கிழமை)
ஞான பலம் கொண்ட அரங்கன் நீயே
ஞானிகளாக்கும் வல்லமையை மக்களுக்கு
3. தானதர்மத்தைக் கொண்டு வரமாக்கி அருள
தவசி உன்வழி வந்தவரெல்லாம் கலியினில் ஞானிகளாவது உறுதியப்பா
அப்பப்பா அரங்கன் தர்மம் அகிலத்தை ஆளுகின்றது
அப்பப்பா அரங்கன் தொண்டர்படை அகிலத்தை மாற்ற உள்ளது
4. அன்னதனால் உலகோர் அரங்கன் வழி ஒன்றுசேர்ந்து
ஆற்றல்பட சன்மார்க்க நெறி ஏற்று தர்மத்தை தொடர்ந்து செய்தால் போதும்
அப்பனே சடுதி உலக மாற்றம்
அரங்கன் சக்தியாக நிகழக்கூடும்
5. கூடவே தானதர்ம வழிகளோடு
குரு அரங்கன் காட்டும் உயர் வழி
வேலவன் என்னை வணங்கும்
வினவிடுவேன் சரணவஜோதி வழிபாடாகும்
6. காலமதில் உலகோர் கடைத்தேற ஆங்காங்கே
கட்டாயம் ஜோதி வழிபாடு செய்ய
ஞானமாக இறங்கி யானே ஞானிகளாக்கி உலகோர்க்கு அற்புதம் நடத்துவேன்
ஞான வாழ்வு தந்து தானதர்ம பலத்தோடு இனிப்பிறவாத பேற்றை யாவர்க்கும்
தந்து ஆறுமுகன் அருள்புரிவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–